RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22243

OPEN ACCESS

# இலக்கியங்களில் கௌமார வழிபாடு

**க. அலமேலுமங்கை** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அருள்மிகு கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணன் கோயில், தமிழ்நாடு, இந்தியா

# Kaumara Worship in Literature

**K. Alamelumangai** [a, *]

[a] Department of Tamil, Kalasalingam arts and science college, Krishnan Kovil, Tamil Nadu, India

* Corresponding Author: drkalamelumangai82@gmail.com

Received: 22.09.2022
Revised: 08-11-2022
Accepted: 15-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

We can see that human life is full of mixture of pleasure and pain. It can be said that when people suffers they had a belief that some power will come and save them, they believe that there is an immense power beyond themselves and create that power as God in their minds and worship the Lord. Thus, the nature worship emerged and they worshiped it by making an image for it. We can see that worship has developed gradually. Murugan worship is the first thing that can be considered in the emergence of god worship. Let us see how the worship of Murugan finds its place in the literature.

**Keywords:** Nature Worship, Murugan Worship, God Murugan, Tamil Tradition

## முன்னுரை

மனித வாழ்க்கையானது இன்பம் துன்பம் இரண்டும் கலந்த கலவையால் நிறைந்திருப்பதே நாம் காணலாம். மனிதர்கள் துன்பம் வயப்படும் பொழுது ஏதாவது ஒரு சக்தி வந்து தன்னை காப்பாற்றாத என்ற ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் காத்திருக்கும் பொழுது தனக்கு மீறி ஒரு அபரிதமான சக்தி இருக்கிறது என்று நம்பிக்கை கொண்டு அதனை உணர்ந்து அந்த சக்தி கடவுளாக தன் மனதில் உருவாக்கிக் கொண்டு இறைவனை மக்கள் வழிபட்டார்கள் எனலாம். அவ்வாறு இயற்கை வழிபாடு தோன்றிய பிறகு அதற்கு ஒரு உருவம் அமைத்து வழிபாடு செய்துள்ளார்கள். வழிபாடு என்பது படிப்படியாகத்தான் வளர்ந்து வந்துள்ளது என்பதை நாம் காண முடிகிறது. அவ்வாறு இறை வழிபாடு தோன்றியதில் முதன்மையாக கருதப்படக் கூடியதாக இருப்பது முருக வழிபாடு என்றே நாம் உணரலாம். முருக வழிபாடு இலக்கியங்களில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதை நாம் காண்போம்.

## ஆய்வு முறை

மனித இனமானது உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றிற்கு இயற்கையைச் சார்ந்திருந்தது. இயற்கை மனிதனுக்கு உதவிய காரணத்தால் தான் நன்றியை தெரிவிக்கும் விதமாக மனித இனம் முதன் முதலில் இயற்கை தெய்வமாக வழிபட ஆரம்பித்தது. முன்னோர்களால் தங்களது வாழ்வில் நன்மை, தீமை ஏற்படும் என்று எண்ணி அவர்களையும் இயற்கையை அடுத்து வழிபட தொடங்கினார்கள். மூன்றாவதாக முன்னோர்கள் பயன்படுத்திய கருவிகளையும் வழிபடத் தொடங்கிய

பின்னர் அவர்களுக்காக நடப்பட்டிருக்கும் நடுகல்லையும் வழிபடத் தொடங்கினார்கள். இவ்வாறாக வழிபாடானது பலவிதங்களில் மாற்றம் பெற்றது என கூறலாம்.

சிலம்பு, மணிமேகலை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சமயங்களின் வழிபாடுகளும், திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் சைவ வைணவ வழிபாடுகளும், பிற்கால காப்பியங்களும் அதனை அடுத்த சிற்றிலக்கியங்களிலும், ஏனைய ஒவ்வொரு காலகட்ட இலக்கிய வகைகளிலும் அவ்வக்கால வழிபாடுகள் இடம் பெற்றுள்ளதை அறியலாம். இலக்கியங்களில் காணப்பட்ட பல வழிபாடுகள் அண்மையில் மறைந்துள்ளது என்பதை நாம் சில வழிபாட்டின் மூலம் அறிய முடியும். ஆனால் கௌமார வழிபாடு என்பது அன்று தொடங்கி இன்றுவரை மக்களிடம் மிக பிரபலமாக அவருடைய மனதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வளர்ந்துள்ளது என்பதை அவர்களுடைய வழிபாட்டின் மூலமாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இலக்கியங்களில் வழிபட்ட வழிபாடுகள் இன்றளவும் மக்களிடம் தொடர்கின்றதா என்பதனை ஆய்வோம்.

## வழிபாடு

வழிபாடு என்பது வணக்கம், பூஜை, வழக்கம் என்னும் பொருள்படும். பொருட்களால் வழிபடலும், பாடலால் வழிபடலும் வழிபாட்டு நெறிகளாகும். இறைவனைத் தேவைக்காக நாடுதலும், நன்றி உணர்வால் அணுகுதலும் உண்டு. மனிதனின் அகநோய் நீக்கவும், புறநோய் தீர்க்கவும் வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. நீண்ட ஆயுளுக்காகவும் இன்ப வாழ்விற்காகவும் மக்கள் இறைவனை வழிபடுகின்றனர். வழிபாட்டுணர்வு மிகப் பழங்காலத்திலேயே தமிழகத்தில் இருந்து வந்துள்ளதை,

"வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே" (Ilankumaranar, 2018)

இந்நூற்பா மூலம் அறியலாம். இலக்கியங்களில் முருகன்,திருமால், சிவன், துர்க்கை கொற்றவை என பல வழிபாடுகள் காணப்படுகின்றன. அவற்றில் கௌமாரனான முருக வழிபாடு பற்றி காண்போம்.

## கௌமார வழிபாடு

"முருகன் கௌமாரத்தின் தெய்வம்.
சுக்குக்கு மிஞ்சிய மருந்து இல்லை
சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வம் இல்லை
வழிக்குத்துணை வடிவேலே
சிந்தை நொந்தவனுக்குக் கந்தனே துணை
வேலிருக்க வினையுமில்லை
மயிலிருக்கப் பயமுமில்லை"

என்ற பழமொழி முருகனே பரம்பொருள் என்பதை நிலைநாட்டுகின்றன.

## முருக வழிபாடு

முருகன் என்னும் சொல் முருகு என்னும் சொல்லிருந்து உருவாக்கப்பட்டுள்ளது. முருகு என்னும் சொல்லுக்கு அழகு, இளமை, தெய்வம்,மணம், வேள்வி என்னும் பல்வேறு பொருட்கள் கூறப்படுகின்றன.

முருகன் போர் செய்வதில் வல்லவன் என்றும், தோல்வியை அறியாதவன் என்றும், மிக்க சீற்றம் உடையவன் என்றும், போரில் பகைவர்களை அழிப்பவன் என்றும் தொகை நூல் பாடல்கள் பதிவு செய்துள்ளன.

## தொல்காப்பியத்தில் முருகன்

தமிழில் உள்ள நூல்களில் பழமையாகக் கருதப்படுவது தொல்காப்பியமாகும். இந்நூல் குறிஞ்சி நில தெய்வமாக முருகனைக்கூறுகிறது.

"மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்" (Ilankumaranar, 2018)

எனப் பொருளதிகார அகத்திணையியலில் குறிஞ்சி நில கடவுளாக முருகனைக் கூறியுள்ளார்.

## சிலம்பில் முருகன்

அசுரர்களைக் கொல்ல தேவர்கள் ஆடிய 11 ஆடல்களைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இவற்றில் முருகன் ஆடிய துடிக்கூத்தும், குடைக் கூத்தும் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளது. துடிக்கூத்து (சிலம்பு 6 : 49-51) குடைக்கூத்து (சிலம்பு 6 : 52-53) கரிய கடலின் நடுவே சூரன் மாமரமாக வேற்று உறுவுடன் நின்றான் அவனது வஞ்சத்தை அறிந்த முருகன் அவனுடன் போரிட்டு வென்றான் வெற்றி களிப்புடன் முருகன் அக்கடலின் நடுவில் அலைகளை அரங்கமாகக் கொண்டு துடியை கொட்டியபடி ஆடிய ஆட்டமே துடிக்கூத்து அவுணர் முருகனுடன் போர் செய்வதற்கு ஆற்றாமல் தன் படைக்கருவிகளை எறிந்து மிகவும் துன்புற்றனர். அப்போது முருகன் தன் குடையை விரித்து முன்னே சாய்த்து ஆடி ஆட்டமே குடைக் கூத்து (Sellappan, 1994).

## பரிபாடலில் முருகன்

"மணிநிற மஞ்ஞை ஓங்கிப் புட்கொடிப்

பணிமுகம் ஊர்ந்த வெல்போர்

இறைவ" (Puliyur Kesigan, 2008)

சேவற் கொடி ஏந்தியவன் மயில்,பிணிமுகம் என்னும் யானை இவற்றை ஊர்தியாக உடையவன் முருகப்பெருமான் எனப் பரிபாடல் கூறுகிறது .கடம்ப மரத்தில் முருகன் வீற்றிருந்ததை,

"புகழ் பூத்த கடம்ப மர்ந்து

தன்பரங்குன்றத்து" ( பா.எ -19)

திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியுள்ள முருகனை மக்கள் வணங்கிவழிபட்டுள்ளனர் என்பதை,

"ஏற்றுதும் மலர் ஊட்டுதும் அவி

கேட்டுதும் பாணி எழுதும் கிணை - முருகன்

தாள்தொழு தண்பரங்குன்று" (Puliyur Kesigan, 2008)

இப்பாடல் அடியின் மூலம் அறியலாம்.

## அகநானூற்றில் முருகன்

சங்ககாலத்தில் தமிழ் கடவுளாக முருகனை வழிபட்டனர் . வேலன் வெறியாட்டு நிகழ்வின் மூலம் முருகனின் வழிபாட்டினையும் வலிமையினையும்

"சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்

சினம்மிகு வேந்தன் தண்பரங்குன்றத்து" (பா.எ - 59)

"புரிக்கணத் தன்ன நாய்தொடர் விட்டு

முருகன் அன்ன சீற்றத்துக் கருந்திறல்" ( பா.எ -68)

படியோர்த் தேய்த்த பல்புகழ் தடக்கை

நெடுவேள்" (Puliyur Kesigan, 2008)

## மலைபடுகடாத்தில் முருகன்

குறிஞ்சி மக்கள் முருகனுக்கு விழா எடுத்து கொண்டாடி மகிழ்ந்ததை மலைபடுகடம் நூல் மூலம் அறிய முடிகிறது.

"குறவர் தம் பெண்டிரோடு

மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென

வான்தோய் மீமிசை அயரும் குரவை" (Sudhakar, 1990)

## ஐங்குறுநூற்றில் முருகன்

குறிஞ்சித் திணையில் வரும் வெறிப்பத்து என்னும் தலைப்பின் கீழ் வரும் 10 பாடல்களிலும் குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகனும், அவனை வழிபடுதலும் அவனுக்குப் பலி கொடுத்து வெறியாட்டு செய்தவித்தலும் கூறப்படுகிறது.

"கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி

யறியா வேலன் வெறியெனக் கூறு" (Puliyur Kesigan, 2008)

ஒரு சிறிய செயலுக்கும் அக்காலத்தே முருகனை நினைத்துப் பலி கொடுத்து வெறியாட்டுதல் செய்தல் மரபெனத் தெரிகிறது.

"குன்றக் குறவன் காதல் மடமகன்

மன்ற வேங்கை மலர்சில கொண்டு" (Puliyur Kesigan, 2008)

இப்பாடலில் குன்றக் குறவன் என அழைக்கப்படுவது முருகனை குறிப்பதாகும்.

# திருமுருகாற்றுப்படையில் முருகன்

## முருகன் இருப்பிடம்

சங்ககாலத்தில் முருகனைக் காட்டிலும் ,சோலைகளிலும், ஆற்றிலும், குளத்தங்கரைகளிலும், கடம்ப மரத்திலும், அம்பலத்திலும், மரக்கட்டைகளிலும் வணங்கினர்.

"காடும் காவும் கவின் பெறு

கந்துடை நிலையிலும்" (Sudhakar, 1990)

அந்தணர்களின் கேள்விகள் வேத முறைப்படி நடக்கத் துணை செய்வது முருகனின் ஒரு முகம் என்பதை

"ஒரு முகம்

வேள்வி ஓர்க்கும்மே "

இந்த அடிகள் சுட்டுகின்றன (Sudhakar, 1990).

பண்டைத் தமிழர்கள் மலர்களிட்டும் இரத்தம் கலந்த அரிசியைப் பலியாக வைத்தும் உயிர் பலி கொடுத்தும் முருகனை வழங்கினர் என்பதை,

"சிறுதிணை மலரோடு விரை

கொண்ட சீர்கெழு விழவினும்" (Sudhakar, 1990)

அறியலாம். திருமுருகாற்றுப் படையில் கொடிநிலை, கந்தழி,வள்ளி என்ற மூன்று நிலைகளில் முருகனை வழிபட்டுள்ளனர்.

"கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி "(38)

"பல்பொறி மஞ்ஞை வெல்கொடி" (122)

"புகரில் சேவலங் கொடியோன் "(210)

"வாரணக் கொடியொடு வயிற்பட நிறீ "(219)

திருமுருகாற்றுப்படை முருகனின் தோற்றப்பொலிவினை

"செய்யன் சிவந்த ஆடையன்

கோட்டன் குறும்பல் இயத்தர்" (Sudhakar, 1990)

எனும் அடிகள் குரவைக் கூத்தாடும் இடத்திற்கு முருகன் வரும் அழகினைக்கூறுகிறது.

## புறநானூற்றில் முருகன்

முருகு அல்லது முருகன் என்னும் சொல் வழக்கு மிக மிகத் தொன்மையான ஒன்றாகும் .முருகு என்ற சொல் அன் என்ற ஆண்பால் விகுதியைப் பெற்று முருகன் என்றானது.

"முருகொத் தீயே முன்னியது முடித்தலின்"

"முருகு புணர்ந்தியன்ற வள்ளி போல"

இப்பாடலில் முருகு என்ற சொல் முருகன் என்பதைக் குறிக்கின்றது (Swaminatha Iyer, 1950).

முருகன் வீரம் மிக்க கடவுளாக ,போர் கடவுளாக புறநானூற்றில் புகழப்படுகின்றார்

## செல்வக்கடுங்கோ வாழியாதன்

"ஆர் அணங்கு ஆகிய மார்பின் பொருநர்க்கு

இருநிலத்து அன்ன நோன்மை

செருமிகு சேஎய் "-நீற்பாடுநர் கையே" (14)

வாழியாதனின் போர் வீரத்திற்கு முருகக்கடவுளின் வீரம் இங்கு சுட்டப்படுகிறது.

### பாரி

பகைவரின் போரைக் கண்டு நாணிப் பின் செல்லாது எதிர்நின்று போர் செய்யும் ஆற்றல் உடையவன் பாரி. அவன் வீரத்தில் முருகக்கடவுளுக்கு ஒப்பாவான்.

"பகைவர் ஓடுகழல் கம்பலை கண்ட

செருவெஞ் சேஎய் பெருவிரல் நாடே" (120)

## பெருநள்ளி

போர்க்களத்தில் முருகனைப் போன்ற சீற்றத்துடன் போரிட்டுப் பகைவர் நாட்டை அழித்தவன் சோழன் ராசசூயம் வேட்ட பெரு நள்ளியானவன் என்கிறது புறநானூற்று பாடல் "முருகற் சீற்றத்து உருகெழு குருசில்" (16).

### நன்மாறன்

நீ முருகக் கடவுளுக்கு ஒப்பாவாய் என்று பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய

நன்மாறனை மதுரை மருதன் இளநாகனார் வாழ்த்துகிறார்.

"நீ ஒரு ஆயினை பெருமா! பெருமழைக்கு

இருக்கை சான்ற உயர் மலைத்

திருத்தகு சேஎய் நிற்பெற்றி சினோர்க்கே " (125)

"மணிமயில் உயரிய மாறா வென்றி

பிணிமுக ஊர்தி ஒண் செய்வோனும் "(56)

இப்பாடலில் மயிலைக் கொடியாகவும், பிணிமுகம் என்னும் யானையை ஊர்தியாகவும் கொண்டு கருதியது முடிப்பான் முருகன் என்று நன்மாறனை முருகவேளுடன் ஒப்புமை செய்து பாடப்பட்டுள்ளது.

## திருமுருகாற்றுப் படையில் முருகனின் பெயர்கள்

ஆறுமுகன், ஆலமர் செல்வன், ஈசன் மகன், ஒருகை முகன் தம்பி, கடம்பன், குறிஞ்சிக்கிழவன், கொற்றவை சிறுவன், செவ்வேள், சேய், சேவலங்கொடியன், நூலறிபுலவன், பழையோள் குழவி, புலவர் ஏறு, மங்கையர் கணவன், மத வலி, மலைக்கிழவோன், மலைமகள் மகன், வேலவன் என்னும் பெயர்கள் இந்நூலில் பாடப்பட்டுள்ளது.

## முருகனின் படை வீடுகள்

முருகனுக்கு நூற்றுக்கணக்கான கோயில்கள் இருந்தாலும் அவற்றுள் மிகவும் முக்கியமான ஒரு கோவிலின் கலசமாக திகழ்வது ஆறுபடை வீடுகள் எனலாம். அவை திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை என்பதே ஆகும். இந்த ஆறு படை வீடுகளும் வகை நிலங்களோடு எவ்வாறு உள்ளது என்பதனை காண்போம் திருப்பரங்குன்றம் - குறிஞ்சி, திருச்செந்தூர் - நெய்தல், பழனி - மருதம், சுவாமிமலை - குறிஞ்சி, பழமுதிர் சோலை-முல்லை

## முருகனின் விழாக்கள்

பங்குனி உத்திரம், தைப்பூசம், கந்த சஷ்டி,திருக்கார்த்திகை, வைகாசி விசாகம், மாசிமகம். கார்த்திகை நாள்: 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவிழாக்களில் திருக்கார்த்திகை நாள் ஒன்று என்பதை சங்க இலக்கியங்கள் இடம்பெற்றுள்ள செய்திகள் மூலம் உணர முடிகிறது. கார்த்திகை நாள் கொண்டாடப்பட்டது என்பதனை அகநானூறு, நற்றிணை, கார்நாற்பது களவழிநாற்பது போன்ற நூல்களில் காண முடிகின்றது. பெருவிழா விளக்கம் (அகம் 185), சுடர்நெடுங்கொடி (நற் 202), நலமிகு கார்த்திகை, (கார் 26) கார்த்திகைச்சாறு (களம் 17). பங்குனி உத்திரம்: இவ்விழா கொண்டாட்டப்பட்ட செய்தியும் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. அகம்( 137:5-11) இறையனார் அகப்பொருள் உரை (களவியல் நூ16) தேவாரம் (7).

## முடிவுரை

பழந்தமிழ் இலக்கியங்களில் பலவகையான கடவுள் வழிபாடுகள் காணப்பட்டாலும் கௌமார வழிபாடு என்னும் முருக வழிபாடு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதனையும், அதனை

பல இலக்கியங்கள் சிறப்பித்து வந்துள்ளது என்பதையும் நாம் அறிய முடிகின்றது. அழகும் அறிவும் வடிவான முருகனை நாமும் வணங்கி வாழ்வில் அனைத்து நலமும் பெறுவோம். கௌமார வழிபாடு என்பதில் அன்று மலைகளில் தொடங்கி இன்று சிறு சிறு கிராமங்களில் கூட மிக சிறப்பான வழிபாடு நடைபெறுவதே நாம் கண்முன்னே காண முடிகிறது. மக்களிடையே கௌமார வழிபாடு தொடர்ச்சியாக சில விழாக்கள் பங்குனி உத்திரம், தைப்பூசம், கந்த சஷ்டி,திருக்கார்த்திகை, வைகாசி விசாகம், மாசிமகம் சில வழிபாடுகள் இன்றளவும் மக்களிடம் இருந்து வருகின்றது காண முடிகின்றது. அழகும் அறிவும் வடிவான முருகனை நாமும் வணங்கி வாழ்வில் அனைத்து நலமும் பெறுவோம்.

## References

Ilankumaranar, U.A. (2018) Tolkappiyam – Thelivurai, Fourth Tamil Sangam, Madurai, India.

Puliyur Kesigan, (2008) Ettuthogai, Paari Nilayam, Chennai, India

Sellappan, S. (1994) Silapathikaram, Bharathi Pathippagam, Chennai, India

Sudhakar, V. (1990) Pathupattu, Varthaman Pathippagam, Chennai, India

Swaminatha Iyer, U.V. (1950) Purananoru, Jothi Achukoodam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License